RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/ irjt22349

OPEN ACCESS

# அகநானூறில் பண்பாட்டுக் கூறுகள்

ப. சாந்தி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்-695034, இந்தியா.

# Cultural elements in Akananuru

**P. Santhi** [a, *]

[a] Department of Tamil, University College, Trivandrum 695034, India

* Corresponding Author: santhipm@gmail.com

Received: 23-04-2022
Revised: 02-07-2022
Accepted: 10-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Akananuru is an important literature in the series of classical literature which has stood the test of time. This book has been examined from various angles. Classical literature is a treasure trove of culture. The best part about it is that they live beyond time. Sangam literature has been studied at various levels from time to time. Classical literature provides space for the study of theories that are changing with the times. This article presents the recording of cultural elements in the Akananuru.

**Keywords:** Akananuru, Tamil literature, Classical literature, Cultural elements

## முன்னுரை

காலம் கடந்து நிற்கும் செம்மொழி இலக்கிய வரிசையில் முக்கியமான இலக்கியமாக அகநானூறு திகழ்கிறது. இந்நூல் பல்வேறு கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. செவ்வியல் இலக்கியங்கள் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. காலம் கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது தான் அதன் சிறப்பம்சம். சங்க இலக்கியங்கள் காலந்தோறும் பல்வேறு நிலைகளில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. காலத்துக்குத் தக்கவாறு மாறி வரும் கோட்பாடுகளையும் புகுத்தி ஆய்வுசெய்ய இடம் தருவது தான் செவ்விலக்கியங்கள். அவ்வகையில் அகநானூறில் பண்பட்டுக் கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## அகநானூற்றில் பண்பாட்டுக் கூறுகள்

அகநானூறு பாடல்கள் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. தமிழர்களின் திருமணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்த பதிவுகள் அகநானூறில் உள்ளன. இன்றைய திருமணச் சடங்குகளிலிருந்து வேறுபட்டனவாகவே அன்றைய சடங்குகள் இருந்துள்ளன. நாள் பார்த்து தான் மணம் செய்துள்ளனர். வளர்பிறை காலத்தில் தான் மணநாள் குறித்திருந்தனர். அகம் இரண்டாவது பாடலில் இச் செய்தி வருகின்றது.

“.............. பைம்புதல்

வேங்கையும் ஒள் இணர் விரிந்தன:

நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே” (Venkatasamy Nattar, 2012)

தலைவன் வரைவு நீட்டித்த வழி தலைவியின் நிலை கண்டு வருந்திய தோழி தலைவனிடம் வரைவு கடாவியபோது திருமணம் பேச வருமாறு அழைக்கிறாள். தலைவி இற் செறிக்கப்பட்டதால் பகற்குறிக்கண் வர இயலாது. இரவுக் குறியில் தலைவியின் தந்தையின் பாதுகாவலைக் கடந்து வருதலும் அரிதே. எனவே வளர்பிறையும் வந்தது திருமணம் பேச உகந்த நாள் என்கிறாள்.வேங்கை மலர்தலும் திங்கள் நிறைவுறுதலும் மணம் நிகழ்த்துவதற்குரிய காலமாகக் கருதினர்.

திருமணத்திற்கு முன் பெண்ணிற்கு சிலம்பு கழித்தல் என்ற சடங்கையும் செய்தனர். இச்சடங்கு பெண்ணின் பெற்றோர்தான் நடத்தினர். இதை பெருவிழாவாகவே நடத்தியிருந்தனர் என்பதை அகப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. அகம் 315 வது பாடலில் நற்றாய் உடன்போக்கு போய தலைவி சிலம்பு கழிதல் சடங்கு நடத்தாமல் தலைவனுடன் சென்று விட்டாளே என்று வருந்துவதைப் பதிவு செய்துள்ளது.

“பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்

அருங்கடி வியல் நகர்ச் சிலம்பும் கழியாள்” (Venkatasamy Nattar, 2012)

சிலம்பு கழித்தல் என்பது திருமணத்திற்கு முன் பெற்றோர் இட்ட சிலம்பை கழற்றும் சடங்கு. அது நடக்கவில்லையே என்று நற்றாய் வருந்துகிறாள்.பெரும்புகழ் கொண்ட பாண்டியனின் வளம் பொருந்திய மதுரையைப் போன்ற அரிய காவலினையுடைய எம் பெரு மனையில் நடக்கவில்லையே என்று நற்றாய் வருந்துகிறாள்.மேலும் ஒரு பாடலும் இதைச் சுட்டியுள்ளது.

“சிறுவன் கண்ணி சிலம்புகழீஇ

அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே” (Venkatasamy Nattar, 2012)

இங்கு செவிலித்தாய் தலைவி சிலம்பு கழிதல் சடங்கை தன் வீட்டில் நடத்தாமல் முன் தெரியாத தேசத்துச் சென்று சிலம்பு கழிதல் சடங்கை நடத்திவிட்டாளே என்று வருந்துகிறாள். எனவே சிலம்பு கழிதல் சடங்கு மிக முக்கியமான ஒரு சடங்காக தமிழர் வாழ்வில் இடம்பெற்றிருந்தது என்பதை உணரமுடிகிறது. அன்று திருமணத்திற்கு மணப்பெண்ணிற்கு மகட்கொடை கொடுத்து தான் திருமணம் செய்துள்ளனர். இதை அகம் 90 வது பாடல் முன்வைக்கிறது.

“கருங் கட் கோசர் நியமம் ஆயினும்,

‘உறும் எனக் கொள்குனர் அல்லர்

நறு நுதல் அரிவை பாசிழை விலையே” (Venkatasamy Nattar, 2012)

வரைவு நீட்டித்த தலைவனிடம் தோழி வரைவு கடாவும் போது பாசிழை விலையே என்கிறாள்.தலைவியின் பெற்றோர் கோசரது நியமம் என்ற ஊரை தலைவியின் அணிகளுக்கு இணையாகத் தருவதாகக் கூறினாலும் அதை கொள்ளார்கள். எனவே அவர்கள் மனதில் இடம் பிடிக்க முயல வேண்டும் என்கிறாள். இது அன்று மணப்பெண்ணுக்கு பொன்பொருள் கொடுத்து தான் மணம் பேசியுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவ்வாறு பெண்ணுக்கு பொருள் வழங்கி திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இன்றும் சில பழங்குடி மக்களிடம் காணப்படுகிறது.இதை சமகாலத்தோடு ஒப்பிட்டு ஆராய்வதால் மாற்றங்களைப் புரிய முடியும்.

## திருமணச் சடங்குகள்

திருமணச் சடங்குகளைப் பெண்களே நிகழ்த்தியுள்ளனர். திருமணச்சடங்கு குறித்து அகநானூறில் இரண்டு பாடல்கள் பதிவு செய்துள்ளன. அகம் 86 வது பாடலும் 136 வது பாடலும் ஆகும். இரண்டு பாடல்களும் ஒரே மாதிரியான சடங்கு முறைகளைத்தான் முன்வைக்கின்றன. சில வேறுபாடுகளும் உள்ளன. உழுந்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவாக வெந்த பொங்கலோடு பெருஞ்சோற்றுத்திரளை உணவாக அளித்தனர். உணவு அளித்தல் இடைவிடாது நிகழ்ந்துகொண்டு

இருந்தது.வரிசையாகக் கால்கள் நட்டுக் குளிர்ந்த பெரிய பந்தலினை அமைத்து அப்பந்தலில் மணலைப் பரப்பி, மனையில் விளக்கேற்றி மாலைகளைத் தொங்கவிட்டு அலங்கரித்திருந்தனர். திங்களும் ரோகிணியும் சேரும் நாளையே திருமணத்திற்கு உகந்த நாளாக கருதினர். பொழுது புலரும் வேளையில் திருமணத்தை நிகழ்த்தியுள்ளனர். முதிய மங்கள மகளிர், தலையில் நிறைநீர்க் குடத்தினைச் சுமந்தவராய்க் கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் ஒருங்கு கூடினர், முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் முறை தவறாமல் எடுத்துத் தந்தனர். தூய அணிகலன்களை அணிந்த புதல்வனைப் பெற்ற மகளிர் நாலவர் கூடி நின்று 'கற்பினின்றும் வழுவாது நல்ல பலவற்றினும் உதவியாக இருந்து நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக் காக்கும் பெருவிருப்பத்தை உடையை ஆகுக, எனக் கூறி வாழ்த்தினர். வாழ்த்தியதோடு நீரோடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து அவளது தலையில் தூவினர். இவ்வாறு வதுவை நிகழ்ந்தது என்று அகம் 86 வது பாடல் பதிவு செய்துள்ளது (Panchangam, 2013). மற்றுமொரு பாடலும் திருமண நிகழ்வு குறித்து பதிவு செய்துள்ளது. இப்பாடல் தரும் விளக்கம் முந்தைய பாடலினின்று சிறிது வேறுபட்டகருத்தை முன்வைத்துள்ளது. திருமணத்திற்கு உணவாக நெய்மிகுந்த வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்துக் குற்றமற செய்து அளவற்ற தன்மையுடன் உயர்ந்தோரை உண்பித்தனர். ரோகிணியும் திங்களும் கூடிய நன்னாளைத்தான் மணத்துக்கு உகந்த நாளாகத் தேர்ந்தெடுத்தனர். மட்டுமன்றி புள் நிமித்தமும் பார்த்தனர். மணம் நிகழும் மனையை அழகுபடுத்தினர். கடவுளை வேண்டினர். மணத்தை அறிவிக்க மண முழவுடன் முரசும் முழக்கினர். மங்கல மகளிர் தலைவிக்கு மண நீராட்டினர்பின் மணப்பெண்ணுக்கு வாகை மரத்தின் இலையை அறுகையின் கிழங்கிலுள்ள அரும்பினையும் சேர்த்துக் கட்டிய வெண்மையான காப்பு நூலைக் கட்டினர்.தூய ஆடையால் அவளைப் பொலிவுறச் செய்து பல்வேறு அணிகலன்களை அணிவித்தனர் (Vaiyapuripillai, 1989).

முதல் பாடல் கூறிய உணவு மட்டுமன்றி வேறு வகையான உணவும் அளிக்கப்பட்டுள்ளது, மட்டுமன்றி 'புரையோர் பேணி' என்ற சொல்லால் உயர்ந்தோர்களிடையே அளிக்கப்படும் உணவு வகை வேறு என்பதயும் உணர முடிகிறது, எங்கும் அந்தணர்கள் ஹோமம் வளர்த்த செய்தியும் இடம்பெறவில்லை. மாறாக முதிய மங்கலப் பெண்கள் தான் திருமணத்தை முன்நின்று நடத்தினர் என்பதும் உறுதியாகிறது. அப்பெண்களின் வாழ்த்தும் சிறப்பாகக் கருதப்பட்டிருந்தது என்பதும் புலனாகிறது. இன்று நாம் திருமணத்தின் போது அணியும் தாலி பற்றிய செய்தியும் குறிப்பிடப்படவில்லை. எனவே இன்று நாம் மரபு என்று செய்யும் சடங்குகள் சங்ககாலத் தமிழரிடையே காணப்படவில்லை என்பது உறுதியாகின்றது. இவ்விரு பாடல்களும் குறிப்பிட்டவற்றுள் காப்பு கட்டுதல்,நாள் குறித்தல் போன்ற சில மட்டுமே இன்றும் கடைபிடிக்கப்படுகின்றன. ஆரியர் வருகைக்குப்பின்னெ தான் அந்தணர்கள் மண நிகழ்வில் முதன்மையிடம் பெறத்தொடங்கினர் எனலாம்.

## நடுகல் வழிபாடு

சங்ககால மக்கள் இறந்தவர் உடல்களை அடக்கம் செய்த இடங்களில் நடுகல் நடும் வழக்கம் இருந்துள்ளது. அதை வழிபடவும் செய்திருந்தனர்.இதை

"நாள் ஆ உயத்த நாமவெஞ் சுரத்து  
நடை மெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்  
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்  
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்  
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்  
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்

வெருவரு தகுந கானம்," (Venkatasamy Nattar, 2012)

என்ற பாடல் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. கரந்தை வீரர்கள் நிரை மீட்டு வரும் வழியில் இறந்து பட்டனர் வழியிலேயே அவர்கள் உடலை கற்குவியல்களால் மூடிவைத்தனர். அங்கே ஒரு கல்லையும் நட்டிருந்தனர். அதில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் பொறிக்கப்பட்டு மயிற்பீலி சூட்டப்பெற்று காணப்பட்டது என்பதை இப்பாடலடிகள் முன்வைக்கின்றன. அன்று நடுகல்லை வழிபட்டுமிருந்தனர். மேலும் பல பாடல்களும் நடுகல் குறித்து பதிவு செய்துள்ளன.

இன்று தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடும் பங்குனி உத்திரதிருவிழா பற்றிய குறிப்புகளும் உள்ளன.

"பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்" (Venkatasamy Nattar, 2012)

கார்த்திகைத் திருவிழா. பூந்தொடை விழா போன்ற விழாக்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. பூந்தொடை விழா என்பது வீரர்களின் கலைப் பயிற்சியின் தொடக்க விழாவாகும். பலியிடுதல் மரபும் இருந்ததை அகம் 242 வது பாடல் சுட்டுகிறது.

அரியா வேலற் தரீஇ, அன்னை

வெறிஅயர் வியன்களம் பொலிய ஏந்தி

மறிஉயிர் வழங்கா அளவை, சென்று யாம் (Venkatasamy Nattar, 2012)

தலைவி தலைவனோடு கொண்ட காதலால் உடல் மெலிந்து காணப்படுவதைக் கண்டு வருந்தும் நற்றாய் வெறியாட்டு நடத்துகிறாள். அவள் நோய்க்கு காரணம் அறிய தினை முதலிய நிவேதனப் பொருள்களைப் பலியாகப் பரப்பி வைத்து, வேலனை அழைத்து,வெறியாடும் களத்தினைப் பொலிவுறச் செய்து ஆட்டுக் குட்டியைப் பலியாகக் கொடுக்கிறாள்.

களம் வரைதல், பலியிடுதல் போன்ற செய்திகள் மேலும் பல பாடல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்வாறு களம் வரைதல் இன்றும் கேரளாவில் கோயில் திருவிழாக் காலங்களில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வெறியாட்டு தொன்மம் சார்ந்தது எனலாம். வெறியாட்டில் முருகக் கடவுளைத்தான் வேலன் வணங்குகிறான். ஆனால் இன்று கேரளாவில் நடைபெறும் களம் வரைதல் பெண் தெய்வங்களுக்காக நடத்தப்படுகிறது. வெறியாட்டு தொடர்பாக நடத்தப்படும் நிகழ்வுகளை சமகால வழிபடு முறைகளோடு ஒப்பாய்வு செய்தல் நன்று (Seenisami, 2010).

## முடிவுரை

அகநானூறு பாடலகள் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளின் கருவுலமாகத் திகழ்கிறது. தமிழர்களின் திருமண முறை குறித்த செய்திகளை அகநானூறிலிருந்துதான் அறிய இயல்கிறது. மேலும் நடுகல் வழிபாடு குறித்தும் பதிவு செய்துள்ளது. அகச் செய்திகள் மட்டுமன்றி போர்குறித்த செய்திகளையும் பதிவு செய்துள்ளது.

## References

Panchangam, K. (2013) puthiya Kotpadu Nokkil Palantamil ilakiyam, Annam Pathippagam, Pondicherry, India

Seenisami, D. (2010) Sevviyal Ilakiyam, Putha publications, Pondicherry, India

Vaiyapuripillai, (1989) ilakiya Sinthanaikal, Vaiyapuripillai Ninaivu Mandram, Thiruvananthapuram, India

Venkatasamy Nattar, N.M, (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License